செய்தி வெளியீடு எண்: 13 நாள்: 07.04.2018

**தேனி மாவட்டம்,**
**நீர்வள ஆதாரத்தினை பெருக்கிட**
**குளங்களை தூர்வாரும் பணிகளில் பொதுமக்கள் பங்காற்றிட வேண்டும்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**********

தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தப்புக்குண்டு ஊராட்சியில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) கட்டுப்பாட்டில் உள்ள பழனிமுத்து கவுண்டன் குளத்தினை பொதுமக்கள் பங்களிப்புடன் தூர்வரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.04.2018) துவக்கிவைத்து பார்வையிட்டார்.

தூர் வாரும் பணியினை துவக்கி வைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திற்குட்பட்ட குளங்களில் உள்ள வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் உள்ள தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி, கம்பம், சின்னமனூர், போடிநாயக்கனூர், உத்தமபாளையம், கடமலை-மயிலாடும்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பொதுப்பணித்துறை (நீர் வள ஆதார அமைப்பு)யின் கட்டுப்பாட்டில் 154 கண்மாய்கள் உள்ளன. கடந்த 2017-18-ஆம் நிதியாண்டில் 121 கண்மாய்கள் தூர்வாரப்பட்டு நீர் நிலைகளை பாதுகாத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 2018-19-ஆம் நிதியாண்டில் தேனி மஞ்சளாறு வடிநிலக்கோட்டத்திற்குட்பட்ட ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 8 கண்மாய்களும், கடமலை-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் 2 கண்மாய்களும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கண்மாய்களும், பெரியார் வைகை வடிநிலக் கோட்டத்திற்குட்பட்ட தேனி ஊராட்சி ஒன்றியத்தில் 11 கண்மாய்களும், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கண்மாய்களும் என மொத்தம் 33 கண்மாய்கள் தூர்வாரப்பட உள்ளது. அதன்படி, தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தப்புக்குண்டு ஊராட்சியில் பழனிமுத்து கவுண்டன் குளம் தூர்வரும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், மொட்டனூத்து ஊராட்சிக்குட்பட்ட ஆசாரிபட்டி-வையாபுரி கண்மாய், கடமலை-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியம், வருசநாடு ஊராட்சிக்குட்பட்ட கெங்கன்குளம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் வடபுதுப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கோவிந்தமுதலியார் குளம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் காமாட்சிபுரம் ஊராட்சிக்குட்பட் ஸ்ரீரெங்க கவுண்டன் குளம் ஆகிய இடங்களில் பொதுமக்களின் பங்களிப்புடன் குளங்கள் மற்றும் கண்மாய்கள் தூர்வாரப்படுகிறது. இப்பணிகளில் 9 ஜே.சி.பி இயந்திரங்கள், 11 டிராக்டர் பயன்படுத்தப்பட்டு, 564 பணியாளர்களை கொண்டு தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

விவசாயிகள் தங்களது நிலத்தை வளப்படுத்த வண்டல் மண் தேவைப்படும் விவசாயிகள், மண்பாண்டங்கள் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு (Domestic Purpose)மண் தேவைப்படும் தங்களுக்கு அருகாமையில் உள்ள நீர்நிலைகளில் இருந்து களிமண், வண்டல், சவுடு மற்றும் கிராவல் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜூன் மாதத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக விவசாயிகள் வண்டல் எடுப்பதன் மூலம் தாங்கள் பயன்பெறுவதோடு நீர்நிலைகளின் கொள்ளளவு அதிகரிப்பதற்கும் வாய்ப்புள்ளது. குளம் மற்றும் கண்மாய்களை அரசு மட்டுமே பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணாமல் பொதுமக்கள், தன்னார்வ ஆர்வலர்கள், விவசாயிகள் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கியோ அல்லது இயந்திரங்களையோ, உழைப்பினையோ வழங்கிட முன்வர வேண்டும். இதன்மூலம் நீர்வள ஆதாரங்களை தூர்வாரி பாதுகாப்பதன் மூலம் குடிநீர் தேவை மற்றும் விவசாய தேவைக்கு நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.வடிவேல் அவர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி அபிதா ஹனீப் அவர்கள், செயற்பொறியாளர் செல்வி கவிதா அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கோவிந்தராஜ் அவர்கள், திருமதி மலர்விழி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**